ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12 ]

Total No. of Printed Pages : 12 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 48 ]

Total No. of Questions : 48 ]

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 85-T**

**Code No. : 85-T**

# D

**CCE PR**
**UNREVISED**
**REDUCED SYLLABUS**
**NSR & NSPR**

**Question Paper Serial No. 813**

## ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

## Subject : SOCIAL SCIENCE (சமூக அறிவியல்)

**( ತಮಿಳು ಮಾಧ್ಯಮ / Tamil Medium )**

**(ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / ಎನ್.ಎಸ್.ಆರ್. & ಎನ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)**

**(Private Repeater / NSR & NSPR)**

ದಿನಾಂಕ : 15. 06. 2023 ] [ Date : 15. 06. 2023

ಸಮಯ : ಬೆಳಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ–1-45 ರವರೆಗೆ ]

[ Time : 10-30 A.M. to 1-45 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 48-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. புறவய மற்றும் அகவய வகை வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலக்கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் விடைகளை எழுதுவதற்கான அதிகபட்ச நேரம் வினாத்தாளின் மேற்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக ஒதுக்கப்பட்ட 15 நிமிடங்களையும் அது உள்ளடக்கியது.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

**I. பின்வரும் வினாக்கள்/மற்றும் முழுமைப்பெறாத கூற்றுகளுக்கு *நான்கு* மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும் :**

**8 × 1 = 8**

1. இரண்டாம் ஆங்கிலோ-மராத்தியப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த ஒப்பந்தம்

   (A) சால்பாய் ஒப்பந்தம்

   (B) லாகூர் ஒப்பந்தம்

   (C) பேசின் ஒப்பந்தம்

   (D) மதராஸ் ஒப்பந்தம்

2. தோண்டிய வாக்கை ஆங்கிலேயர்கள் கொன்ற இடம்

   (A) ஷிக்காரிப்புரா

   (B) ராய்ச்சூர்

   (C) ஷிர்ஹட்டி

   (D) கொனகல்

3. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு அவையில் இந்தியாவிற்கு நிரந்தர உறுப்பினர் உரிமை பெற வேண்டும் என்று உரிமை கோரும் நாடு

   (A) ஐக்கிய அமெரிக்கா

   (B) பிரிட்டன்

   (C) ரஷ்யா

   (D) பிரான்ஸ்

4. நர்மதா பச்சாவோ ஆந்தோலன் இவருடைய தலைமையில் நடைபெற்றது

   (A) சிவராம் காரந்தா

   (B) சுந்தர்லால் பஹூகுணா

   (C) மேதா பாட்கர்

   (D) குசுமா சொரபா

5. சட்லெஜ் ஆற்றிற்கிடையே அமைக்கப்பட்ட பல்நோக்கு நதி திட்டம்

   (A) பக்ரா நங்கல் அணைத் திட்டம்

   (B) ஹீராகுட் அணைத் திட்டம்

   (C) பம்பா சாகர் அணைத் திட்டம்

   (D) நாகார்ஜூனசாகர் அணைத் திட்டம்

6. இந்தியாவின் 'சிலிகான் சிட்டி' ( நகரம் )

(A) மும்பை

(B) சென்னை

(C) தில்லி

(D) பெங்களூரு

7. தங்கள் நகைகளையும் மதிப்புடைமைகளையும் பாதுகாப்பதற்காக வங்கிகளிடமிருந்து மக்கள் பெறும் சேவையாவது

(A) சேமிப்பு வங்கிக் கணக்கு சேவை

(B) காப்புப் பெட்டகச் சேவை

(C) பருவ வைப்புத் தொகைக் கணக்கு சேவை

(D) நடப்புக் கணக்கு சேவை.

8. 'கிராம வளர்ச்சியே இந்தியாவின் உண்மையான வளர்ச்சியாகும்' என்று மொழிந்தவர்

(A) சர். எம். விஷ்வேஷ்வரய்யா

(B) மகாத்மா காந்திஜி

(C) டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்

(D) ஜவஹர்லால் நேரு

**II. பின்வரும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும் :** **$8 \times 1 = 8$**

9. ஹரிப்பூர் தேசிய காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமைத் தாங்கியவர் யார் ?

10. ‘அபிநவ பாரத்’ என்ற இரகசிய நிறுவனத்தைத் துவக்கியவர் யார் ?

11. ‘மனித உரிமை நாள்’ எப்பொழுது கொண்டாடப்படுகிறது ?

12. தீண்டாமையை பற்றி மகாத்மா காந்தியடிகள் என்ன கூறினார் ?

13. இந்தியாவிலேயே மிகக் குறைந்தளவு மழை பதிவாகும் பிரதேசம் யாது ?

14. தொழிற் பாகுபாட்டைப் பற்றி பிளேட்டோ என்ன கூறினார் ?

15. பெண்களின் சுய உதவிக் குழுக்கள் கிராமப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஏன் ?

16. தேசிய சேமிப்பு சான்றிதழை வழங்கும் துறை எது ?

**III. பின்வரும் வினாக்களுக்கு இரண்டிலிருந்து நான்கு வாக்கியங்கள் வரை விடையளிக்கவும் :** **18 × 2 = 36**

17. பஞ்சசீல தத்துவங்கள் யாவை ?

**அல்லது**

காலனித்துவ ஆட்சியில், பொருளாதார ரீதியாக பின்தங்கிய நாடுகளின் முக்கிய அம்சங்கள் யாவை ?

18. பொருளாதார படிநிலை முறைகள் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு எவ்வாறு மாறுபடுகிறது ?

**அல்லது**

அமைதி பள்ளத்தாக்கு இயக்கம் ஏன் நடத்தப்பட்டது ?

19. மூன்றாம் ஆங்கிலோ மராத்தியப் போரின் விளைவுகள் என்ன ?

20. போர்ச்சுகீசியரிடமிருந்து கோவா எவ்வாறு விடுவிக்கப்பட்டது ?

21. தேயிலை பயிரிடுவதற்குத் தேவையான காரணிகள் யாவை ?

22. தொலைத் தொடர்பின் முக்கியத்துவம் என்ன ?

23. அமெரிக்கர்களுக்கு ஜான். எப். கென்னடி அவர்கள் வழங்கிய நுகர்வோர் உரிமைகள் யாவை ?

24. மனித மேம்பாட்டு சுட்டிகள் யாவை ?

25. வாரன் ஹேஸ்டிங்க்ஸ் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட நீதி மன்றங்கள் யாவை ?

26. சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியா சந்தித்த சிக்கல்கள் யாவை ?

27. இந்தியாவின் சுதந்திர இயக்கத்தின் முக்கிய புரட்சியாளர்கள் யாவர் ?

28. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உலகம் எதிர்கொண்ட முக்கிய பிரச்சனைகள் யாவை ?

29. வகுப்புவாதத்தினால் ஏற்படும் பிரச்சனைகள் யாவை ?

30. சுற்றுச் சூழல் பாதுகாக்கப்பட இந்தியாவில் நடந்த சுற்றுச் சூழல் இயக்கங்கள் யாவை ?

31. இந்தியாவில் காணப்படும் நான்கு பருவங்கள் யாவை ?

32. கருநாடகத்தில் சாஃப்ட்வேர் ( மென்பொருள் ) துறைகள் அதிக அளவில் மையமாக உள்ள நகரங்களின் பெயர்களைக் குறிப்பிடவும்.

33. ஏதேனும் இரண்டு வீட்டு வசதி திட்டங்களைக் குறிப்பிடவும்.

34. நுகர்வோர் நீதிமன்றங்களின் மூன்று நிலைகளைக் குறிப்பிடவும்.

**IV. பின்வரும் வினாக்களுக்கு ஆறு வாக்கியங்களில் விடையளிக்கவும் : $9 \times 3 = 27$**

35. இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் பால கங்காதர திலகரின் பங்கை விளக்கவும்.

**அல்லது**

ஆங்கிலேயருக்கு எதிராக சங்கொள்ளி இராயண்ணாவின் கிளர்ச்சியை விளக்கவும்.

36. இமயமலை இந்தியர்களுக்கு எப்படி பயனுள்ளதாக விளங்குகிறது ?

**அல்லது**

அண்மைக் காலத்தில் மண் அரிப்பை நாம் எவ்வாறு தடுத்துக் கொண்டிருக்கிறோம் ?

37. கிராமிய வளர்ச்சியில் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் பங்கு என்ன ?

**அல்லது**

கிராமிய மேம்பாட்டிற்குத் தேவையான செயல்பாடுகள் யாவை ?

38. வங்கிக் கணக்கைத் தொடங்குவதற்கு நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் யாவை ?

**அல்லது**

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் நோக்கங்கள் யாவை ?

39. பிரார்த்தனை சமாஜம் மூலம் பிரச்சாரம் செய்யப்பட்ட சீர்த்திருத்தங்கள் பற்றி விளக்கவும்.

40. முதல் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தோல்விக்கான காரணங்கள் யாவை ?

41. இந்தியா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ( USA) இடையிலான உறவை விளக்கவும்.

42. மிக அதிக மக்கள் தொகையைப் பெற்றுள்ள இந்திய நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை எப்படி தீர்க்க முடியும் ?

43. புயலுக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை ?

**V. பின்வரும் வினாக்களுக்கு எட்டு வாக்கியங்களில் விடையளிக்கவும் :** **4 × 4 = 16**

44. பிரிட்டிஷ் கல்விமுறை இந்தியாவின் மீது விளைவுகளை ஏற்படுத்தியது. இதை உறுதி செய்யவும்.

*அல்லது*

ஒத்துழையாமை இயக்கத்தின்போது உண்டான முக்கிய வளர்ச்சிகள் யாவை ?

45. 'டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் ஒரு சிறந்த சீர்திருத்தவாதியாவார்' இதனை உறுதி செய்யவும்.

46. ஊழலின் விளைவுகள் யாவை ?

47. இந்தியாவில் காடுகளைப் பாதுகாக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன ?

**VI.** 48. இந்திய உருக்கோடு ( **Outline** ) படத்தை வரைந்து கீழ்க்காண்பவற்றைக் குறிப்பிடவும். **1 + 4 = 5**

a) தாமோதர் பள்ளத்தாக்கு

b) பத்ராவதி

c) கண்ட்லா

d) பெங்களூரு

*பார்வைத் திறன் அற்றோர்க்கான வினா :* **(வினா எண் 48 க்கான மாற்று வினா)** **5**

பல்நோக்கு ஆற்று பள்ளத்தாக்கு அணைக்கட்டு திட்டங்களின் நோக்கங்கள் யாவை ?